1986 நவம்பர் 19]

புதியதாக கட்ட டெண்டர் போடப்பட்டு பணியும் ஆரம்பிக்கப் பட்டது. தற்சமயம் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இந்தப் பணிகள் துரிதமாக நடைபெறாமல் இருப்பது கவலைக்குரிய ஒன்றாகும். அதிகாரிகளுக்கும், காண்டிராக்டர்களுக்கும் இடையே தகராறு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மேலும் அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிற காரணத்தால் இந்த வேலைகள் எல்லாம் நடைபெறாமல் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது என்ற கவலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கவலையை நீக்கி அங்கே பணிகள் துரிதமாக நடப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விகள் எல்லாம் சுத்தமாக மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதவை. இருந்தாலும் பொதுவான விளக்கங்களை மட்டும் என்னால் தர முடியும். குறிப்பிட்ட பாலத்தைப் பொறுத்த வரையில் என்ன நிலைமை என்பதற்கான விவரம் இல்லாத காரணத்தால் இப்போது என்னால் சொல்ல முடியாது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி சட்டமன்றத்தில் வரட்டும் என்று காத்து இருக்காமல் எங்களிடத்திலே சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கும். அதிகாரிகள் மாற்றப் படுகிற காரணத்தால் வேலைகள் நிற்கின்றன என்று சொல்ல முடியாது. ஒரு அதிகாரி போய் இன்னொரு அதிகாரி வந்தால் உடனடியாக அந்த வேலைகளை எல்லாம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் தொடர்ந்து செய்யக் கடமைப்பட்டிருக் கிறார்கள். அப்படி யாராவது உங்களிடத்தில் தவறாகச் சொல்லியிருந்தால் அதை நீங்கள் திருத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏதேனும் காலதாமதம் இருந்தால் துரிதமான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

சென்னை வியாசர்பாடியில் புதிய இரயில் நிலையம்

86—(*வினா எண் 8605) திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—திருவள்ளூர் பிரிவில் வியாசர்பாடி அருகே புதிய இரயில் நிலையம் ஒன்று ஏற்படுத்திட மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : பேசின் பாலம் மற்றும் பெரம்பூர் இரயில் நிலையங்களுக்கிடையில் வியாசர்பாடியில் புதிதாக இரயில் நிலையம் ஒன்று அமைத்திடும் பணி விரைவாக நடந்துவருகிறது. இவ்வருட இறுதிக்குள் இப்புதிய இரயில் நிலையம் செயல்படத் தொடங்கும் என இரயில்வே நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.